# தி.மு.க. பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர், பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

5- ஆம் பக்கத் தொடர்ச்சி

### ஆற்றூர் பேரூர்

அமைப்பாளர் - அபிஷேக் 4/14, சிறிய தோட்டத்து விளை, தேமானூர்

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர்.சி. லிபின் 5-88/5, தேமானூர் திருவட்டார் 2) வி.எம். ஸ்ரீஜித் 4/32, தேமானூர் திருவட்டார்

### திருவட்டார் பேரூர்

அமைப்பாளர் - டார்வின் போஸ் 1/87அம்பாங்காலை திருவட்டார்

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். ஸ்மித் 1-20/17 எ அம்பாங்காலை திருவட்டார் 2) காட்வின் விஜய் 7/153எ தட்டை காட்டு விளை கொல்வேல் திருவரம்பு

### பொன்மனை பேரூர்

அமைப்பாளர் - ஜெர்சின் 13/75, குளச்சவிளாகம் பொன்மனை - 629161

துணை அமைப்பாளர்கள் - 1) சரல் சிவன்குட்டி பாம்பச்சை கரைக்காடு வெண்டலிக்கோடு - 629161 2) எஸ்.யு. ஆகாஷ் 6/131 மலவிளை முள்ளுவிளை செருப்பால்லூர் 3) செல்வின் ஒருகம்பு விளை குளச்சவிளாகம் பொன்மனை - 629161

### குலசேகரம் பேரூர்

அமைப்பாளர் - டி.பி. கிரீஷ்குமார் 10-19, ஐயப்ப விலாசம் இட்டகவேலி செருபால்லூர் அஞ்சல்

துணை அமைப்பாளர்கள் - 1) கிருஷ்ணகுமார் 2/52, சங்கரன்விளை குலசேகரம் -629161 2) ராஜ வினு 21/41எ, மணலிவிளை புத்தன்வீடு செருபால்லூர் -629161

### திற்பரப்பு பேரூர்

அமைப்பாளர் - ரிசிகேஷ் 27/104, வறுவிளை திற்பரப்பு -629161

துணை அமைப்பாளர்கள் - 1) ஜினு 21/46, ஜினு நிவாஸ் பிணந்தோடு குலசேகரம் அஞ்சல்-629161 2) எஸ். லிபினா மலவிளை முள்ளுவிளை செருப்பால்லூர்

### கடையல் பேரூர்

அமைப்பாளர் - பைஜு கணபதிகல், மருதம்பாறை - 629101

துணை அமைப்பாளர்கள் - 1) ரமேஷ் சிற்றார்க் தெரு, சிற்றார் அஞ்சல் - 629161 2) சி. விசுவம்பரன் கோலஞ்சிமடம் மோதிரமலை, கோதையார் அஞ்சல் 3) பி. ஸ்ரீகலா வேலிப்பிலாம், மோதிரமலை, கோதையார் அஞ்சல்.

### பளுகல் பேரூர்

அமைப்பாளர் - ச. அனீஷ் தேரிபுரம் காரைக்காடு புத்தென் வீடு, மூவோட்டுக்கோணம் பளுகல்

துணை அமைப்பாளர்கள் - 1) டி.எஸ். அபிஜித் சுந்தரபவன் மத்தம்பாலை பளுகல் 2) ஜி. ஜெனிபர் கருமான்னூர் பளுகல்

### இடைக்கோடு பேரூர்

அமைப்பாளர் - செ. ஷாலின் இடைக்கோடு - 629152

துணை அமைப்பாளர்கள் - 1) க. அபின் வெட்டு விளை மஞ்சாலுமூடு இடைக்கோடு - 629151 2) ரா. பிரதீப் தெக்கே புல்லாணி காலை புத்தன்வீடு இடைக்கோடு - 629152

### அருமனை பேரூர்

அமைப்பாளர் - கல்ஸ்கி பாண்டிமாவிளை அருமனை, விளவங்கோடு

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர்.டி. பெர்லின் ரூபின் பனிச்சவிளை, அருமனை, விளவங்கோடு 2) ரெத்தின் பாண்டிமாவிளை அருமனை, விளவங்கோடு 3) விபின் அன்னை நகர் அருமனை, விளவங்கோடு

### பாகோடு பேரூர்

அமைப்பாளர் - ஜெ.ஜெ. ஜெயன் மரிசினிவிளைவீடு, கடமக்கோடு, பாகோடு

துணை அமைப்பாளர்கள் - 1) பெரேஷ் பாபு கூம்புவிளை, பாகோடு 2) டினோ 4/9, கூம்புவிளை, பாகோடு 3) ஜெயசிங் வில்பிரெட் ராஜ் பருத்திவிளை வீடு, விளச்சேரி, திக்குறிச்சி, பாகோடு, விளவங்கோடு - 629168

### களியக்காவிளை பேரூர்

அமைப்பாளர் - ஜோயல் ஜெபின் 9/14 ஆலம்பாறை களியக்காவிளை விளவங்கோடு

துணை அமைப்பாளர்கள் - 1) சந்தியா கல்லுதரைவீடு களியக்காவிளை விளவங்கோடு 2) அகின் லால் 4/129எ, ஆலுவிளை பனங்காலை களியக்காவிளை 3) பெனோ ராஜன் 15-126எ, பாஞ்சிகாட்டுவிளை களியக்காவிளை

### புதுக்கடை பேரூர்

அமைப்பாளர் - எல்.இ. அன்பரசன் பாறவிளை வீடு முஞ்சிறை புதுக்கடை

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ்.கே. கௌஷிக் மணலி புதுக்கடை - 629171 2) ஆர். பிரவீன் பிளாக் ஆபீஸ் ரோடு புதுக்கடை - 629171 3) டி. அஸ்ஸிம் சாகர் காடஞ்சேரி புதுக்கடை - 629171

### பாலப்பள்ளம் பேரூர்

அமைப்பாளர் - ஒய். ஆன்றோ மார்ஷல் 3-41/1, முகிலவிளை மிடாலக்காடு பாலப்பள்ளம்

துணை அமைப்பாளர்கள் - 1. டி. எபின் ஜோ 152டி-1, கோவில்விளை கூற்றுத்தாணி பாலப்பள்ளம் - 629159 2) எம். மனு 10-47, அரசுவிளை நீர்வகுழி பாலப்பள்ளம் - 629159

### கீழ்குளம் பேரூர்

அமைப்பாளர் - டபிள்யு. ஜாண் ஜோபி 20/93 ஆவரவிளை தொழிக்கோடு கீழ்குளம்-629193

துணை அமைப்பாளர்கள் - 1) ஜெ. பாள்டுவின் 20-35 ஆவரவிளை தொழிக்கோடு கீழ்குளம் - 629193 2) பி.டி. ஆனந்த் பொன்குமார் 21-157/2 நாலாம்பிலாவிளை தொழிக்கோடு-629193 கீழ்குளம்

### கிள்ளியூர் பேரூர்

அமைப்பாளர் - ஆர். ராஜசீலன் விராலிவிளை, தொலையாவட்டம் - 629157

துணை அமைப்பாளர்கள் - 1) வி. வினோத் 7/326, விராலிவிளை தொலையாவட்டம் - 629157 2) எஸ். மைக்கிள் ஷைஜு 7/31 விராலிவிளை தொலையாவட்டம் - 629157

### கருங்கல் பேரூர்

அமைப்பாளர் - ஜெ. எ. ரூபன் 4/55/பி, அனஞ்சுக்கோடு கருங்கல் அஞ்சல்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.சுஜின் 116, திருஞானபுரம், மங்கலகுன்று 2) அபினேஷ் 4/49, அனஞ்சுகோடு, கருங்கல் அஞ்சல்.

### நல்லூர் பேரூர்

அமைப்பாளர் - ஜெ.ஜீனோத் குமார் 1/106, கண்ணன் விளை கொல்லஞ்சி, முளங்குழி அஞ்சல்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். ஸ்ரீஜித் 6/44டி/ கல்ப விளை, காப்புக்காடு முளங்குழி அஞ்சல் 2) ஜெயின் 6/12, படப்பரந்தவிளை, பல்லன் விளை , மார்த்தாண்டம் அஞ்சல்

### உண்ணாமலைக்கடை பேரூர்

அமைப்பாளர் - ஆர். அஜீஸ் 23/105 எ, மூன்றாம் பிலாபிளை விரிகோடு அஞ்சல்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ் ஜெபர்லின் 23/29டி, வாழ விளை விரிகோடு அஞ்சல். 2) ஆர். அபிஸ் 23/105 எ மூன்றாம் பிலாவிளை, விரிகோடு அஞ்சல்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 13-08-2025.

கு. கருணாநிதி
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

---

கரூர் மாவட்டத்தில்

# ரூ.800 கோடியில் வளர்ச்சி திட்டப் பணிகள்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர், ஆக. 18 -

கரூர் மாவட்டத்தில் லைட்ஹவுஸ் ஸ்கீம், திட்டத்தின் மூலம் ரூ. 800 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது என கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், தலைமையில், கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.8.08 கோடி மதிப்பீட்டில் 97 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும். 6 முடிவுற்ற பணிகளை திறந்தும் வைத்தார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தக் கூடிய வகையில் பல்வேறு புதிய சிறப்பு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு பணிகளாக நிறைவு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன.

கரூர் மாநகராட்சி மண்டலம் 3 மற்றும் 4 பகுதிகளுக்கு புதிய கிணறு உள்ளிட்ட பல்வேறு அடிப் படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு, இந்த தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றன. 1.66 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த பணிகள் மூலமாக மண்டலம் 3, 4 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே வழங்கப்பட்ட 11 MLD குடிநீர் அளவிலிருந்து உயர்த்தி. 15 MLD குடிநீர் வழங்கக்கூடிய அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கரூர் மாநகராட்சியில் "லைட்ஹவுஸ் ஸ்கீம்" என்ற திட்டத்தின் மூலம் ரூ. 800 கோடி மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைத்தல். புதிய குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ள அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. கரூர் மாநகராட்சியில் ஏற்கனவே கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 328 கோடி மதிப்பீட்டில் பதிதாக சாலைகள். கால்வாய்கள், தெருவிளக்குகள் உள்ளிட்ட பொது மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பணிகள் நிறைவுற்று, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்வாறு தொடர்ச்சியாக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் முதலமைச்சர் அவர்கள் நிதிகளை வழங்கி கொண்டிருக்கிறார்கள் இவ்வாறு வி. செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாநகராட்சி வார்டு எண் 35. 20. 14 12. 17, 19, 38, 42, 37, 36, 46, 43, 44, 47, 48, 41, 39, 40, 16, 15, 18. 13 க்கு உட்பட பகுதிகளில் புதிதாக சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால், தார்சாலை மேம்படுத்தும் பணிகள், பேவர் பிளாக் அமைக்கும் பணிகள் மற்றும் மண்டலம் 3 க்குட்பட்ட கட்டளை தாந்தோணி, கட்டளை சணப்பிரட்டி, தலைமை நீரேற்று நிலையம் மற்றும் மூலக்காட்டா னூர் நீருந்து நிலையத்தில் வட்டக் கிணறு தூர்வாரு தல், டிஜிட்டல் அளவு மானி மின் தேக்கி. நீர்மூழ்கி பம்பு செட் உபகரணங்கள் விநியோகம் மற்றும் சோதனை செய்து இயக்குதல் பணிகளையும்.

கட்டளை சணப்பிரட்டி நீருந்து நிலையத்தில் புதிய நீர் மூழ்கி மோட்டார். மின் உபகரணங்கள் மற்றும் வட்ட கிணறு அமைக்கும் பணிகளையும், மண்டலம் 4 க்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையம். பொன்நகர் நீருந்து நிலையத்தில் டிஜிட்டல் அளவு மானி, தானியங்கி மின் தேக்கி, டிரா ன்ஸ்பார்மர், ஜெனரேட்டர் பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் மற்றும் சோதனை செய்து இயக்குதல் பணிகளையும், 165 எச்.பி மின் மோட்டார் பம்பு செட் 300 மீ இடைமட்ட ஆழ்துளை கிணறு சுத்தம் செய்யும் பணிகளையும், 50 எச்.பி நீர் மூழ்கி பம்பு செட் மற்றும் இதர மின் உபகரணங்கள் விநியோகம் மற்றும் சோதனை செய்து இயக்கும் பணிகளையும் என மொத்தம் ரூ.8.08 கோடி மதிப்பீட்டில் 103 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை வி. செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர். இளங்கோ. கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாம சுந்தரி, மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாநகராட்சி மேயர் வெ. கவிதா, மாநகராட்சி ஆணையர் சுதா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், துணை மேயர் . ப. சரவணன். மாநகராட்சி செயற் பொறியாளர் சுந்தர்ராஜ், மண்டல குழுத் தலைவர்கள் எஸ்பி.கனகராஜ், ஆர்.எஸ். ராஜா. மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

# பூங்கா நகர், ஏகாம்பரேஸ்வரர் கோயில் குடமுழுக்கு முன்னேற்பாடு பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, ஆக.18-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று முன்தினம் (16.08.2025) சென்னை, பூங்கா நகர், காமாட்சி அம்மன் உடனுறை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, காவல்துறை, பொதுப்பணித் துறை, தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, இந்து சமய அறநிலைத்துறை அலுவலர்களுடன் முன்னேற்பாடு பணிகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், பூங்கா நகர் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்கு சுமார் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கருங்கல் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆகஸ்ட் மாதம் 21 அன்று குடமுழுக்கு நடத்தப்பட உள்ளது. இக்குடமுழுக்கிற்கு சுமார் 5,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்தர்கள் எளிதாகவும் விரைவாகவும் தரிசனம் மேற்கொள்ளும் வகையில் வரிசை முறையினை ஏற்படுத்தி, துறை சார்ந்த செயல் அலுவலர்களை சுழற்சி முறையில் பணியமர்த்தம் செய்திட வேண்டும். பக்தர்களுக்கு தேவையான தரமான உணவு மற்றும் குடிநீர் பாட்டில்கள் திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பில் வழங்கிடவும், குடமுழுக்கு விழாவில் பங்கேற்கும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதப்பை வழங்கிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் சார்பில் தற்காலிக கழிப்பிடங்கள் மற்றும் குப்பை தொட்டிகள் வைப்பதோடு, குப்பைகளை உடனுக்குடன் அகற்றிட வேண்டும். பாதுகாப்பு பணியில் 200க்கும் மேற்பட்ட காவலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இரண்டு இடங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்படுவதோடு அவசரகால ஊர்தி மற்றும் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

குடமுழுக்கு விழாவிற்கு வருகை தரும் பக்தர்கள் மன நிறைவோடு தரிசனம் செய்து திரும்புகின்ற வகையில் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலைத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, பொ.ஜெயராமன், மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, துணை ஆணையர் இரா.ஹரிஹரன், உதவி ஆணையர் க.சிவக்குமார், காவல் உதவி ஆணையர் லோகநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி உதவி பொறியாளர் கார்த்திக், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜே.அசோக்குமார் முந்திரா, அறங்காவலர்கள் ப.வெங்கடேசன், பு.நலேந்திர குமார், திருமதி பா. சசிகலா, ம.முத்துகுமார், செயல் அலுவலர் இரா. முத்துசாமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்,

---

# திருவொற்றியூர் ஜெயகோபால் கரோடியா பள்ளியில் தேசியக் கொடியேற்றி - இனிப்பு!

சென்னை, ஆக. 18-

இந்திய திருநாட்டின் 79 வது சுதந்திர தின விழா நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் மாநில மீனவர் அணி துணைத்தலைவர், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் தேசிய கொடியை ஏற்றி மாவவர்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இந்தியா திருநாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழா திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் உதவி தலைமை ஆசிரியர் திருமதி.சாந்தி வரவேற்பில், தலைமை ஆசிரியர் திருமதி.வெற்றிச்செல்வி, உதவி தலைமை ஆசிரியர் திரு. பாலாஜி ஆகியோர் முன்னிலையில், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வி. ராமநாதன், ஆலோசகர் கே.பி. சொக்கலிங்கம் ஆகியோர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து, மாணவ மாணவிகளின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றார்.

அதனை தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிலம்பாட்டம் குத்துச்சண்டை போட்டிகள் நடைபெற்றது, நடைபெற்று முடிந்த 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொது தேர்வில் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களை ஊக்க தொகை வழங்கினார்.

---

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆ.லிவிங்ஸ்டன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக திரு. **ஜெ.மிலன்** (122/841, புதூர், பொழிக்கரை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்) அவர்கள் இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், அகஸ்தீஸ்வரம் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் பா.பாபு அவர்கள், அகஸ்தீஸ்வரம் பேரூர்க் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், **திரு. டி.விஜய கங்காதரன்** ( 15/39, புஜைப்பரைவிளை, அகஸ்தீஸ்வரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்) அவர்கள் அகஸ்தீஸ்வரம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர் மாவட்ட பிரதிநிதி தேர்தல் தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு

"புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர் மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெ.மணி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, 2025 ஆகஸ்ட் 4 (திங்கட்கிழமை) அன்று ஒரு பொறுப்புக்கு ரூ.500/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.""என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு ம. கரிகாலன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அரிமளம் வடக்கு ஒன்றியம்,

அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதியாக

திரு. ம.கரிகாலன்
எண். 10, குட்டையன் செட்டியார் சந்து,
அரிமளம் 622 201, திருமயம் தாலுகா,

புதுக்கோட்டை மாவட்டம். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

நாமக்கல் மேற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.பி.சாமிநாதன் அவர்கள் கபிலர்மலை தெற்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், பி.பி.சாமிநாதன் அவர்கள், தான் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

நாமக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஆகஸ்ட் 20 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும். வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# கடலூர் மேற்கு மாவட்ட அமைப்பாளர் - தலைவர் நியமனம்!

## தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு

கடலூர் மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவராக நியமிக்கப்பட்ட **பி.இராமகிருஷ்ணன்** (131, வடக்கு தெரு, தொழுதூர் கிராமம் & அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.) அவர்கள் கடலூர் மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட **ஆர்.நல்லுசாமி** (363ஏ, முருகன் தெரு, வட்டம்21, குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம்) அவர்கள் கடலூர் மேற்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்..

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 14-08-2025.

டி.செங்குட்டுவன்
செயலாளர்,
தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி

---

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், மானூர் கிழக்கு ஒன்றியம், அலங்காரப்பேரி எஸ்.சங்கர், அலவந்தான்குளம் ஒய்.இன்பராஜ் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.